**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்.**
**ந.க.எண். 4846/அ2/2024, நாள். .06.2025.**

---

**பொருள் :** பள்ளிக் கல்வி – ஓய்வூதிய நிலுவை இனங்களை முடித்தல் – (GPF /DCRG / CPS ) ஆகிய கருத்துருக்களை உரிய காலத்தில் தயார் செய்து சென்னை மாநில கணக்காயர் / GDC ஆகியவற்றிற்கு அனுப்பி வைத்து பெறப்பட்ட நிலுவைகளை முடித்தல் சார்பாக 14.06.2025 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்துதல் சார்பாக.

**பார்வை :** சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.079798/ஆர்1/இ1/2024, நாள். .06.2025.

-----

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க, வேலூர் மாவட்டம், அரசு / அரசு நிதியுதவி / நகரவை உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் GPF / DCRG / CPS ஆகிய இனங்களில் ஏராளமான அளவில் உரிய காரணங்கள் ஏதுமில்லாமல் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், AG உத்திரவு வரப்பெற்றும் தடையின்மைச் சான்று வழங்காமல் நிலுவை வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து மேற்படி நிலுவை இனங்களை விரைவில் முடித்து அறிக்கையினை சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து இத்துடன் இரண்டு பட்டியல்கள் மற்றும் உரிய அறிவுரைகள் கீழ்கண்டவாறு தெரிவிக்கலாகிறது.

**பட்டியல் 1 – ஏப்ரல் 2024 முதல் ஜுன் 2025 வரையுள்ள GPF / DCRG / CPS நிலுவை இனங்கள்**

1. நிலுவையில் உள்ள GPF / DCRG / CPS ஓய்வூதிய இனங்களை 14.06.2025 அன்று ஆன்லைன் மூலம் கருத்துருக்கள் அனுப்ப உரிய ஆவணங்களுடன் தயார் நிலையில் வர வேண்டும் (அசல் பணிப்பதிவேடு மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து கொண்டு வரவும்).
2. ஏற்கனவே அனுப்பப்பட்டு இருப்பின் அதன் விவரத்தினை கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்கனவே கருத்துருக்கள் அனுப்பி கூடுதல் விவரங்கள் அளிக்கக்கோரி நிலுவையாக வைக்கப்பட்டு இருந்தால் உரிய தகவல்களை தயார் செய்து அதனையும் AG அலுவலகம் மற்றும் GDC அலுவலகம் ஆகியவற்றிற்கு 14.06.2025 அன்றைய தினமே சமர்பிக்கவேண்டும்.
3. ஏற்கனவே ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் வழங்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்டவரின் AG Authorisation order copy, Bill Passed Details, Bank pass book Xerox 1st Page and proper amount entry page ஆகியவற்றை ஆய்வுக் கூட்டத்தில் சமர்பிக்க வேண்டும்.
4. வழக்கு நிலுவை, 17பி குற்றச்சாட்டு நிலுவை காரணமாக கருத்துருக்களை அனுப்ப இயலாத நிலை இருப்பின் அதன் விவரத்தினை ஒப்படைக்க வேண்டும். எழுத்து பூர்வமான ஆதாரம் அல்லது ஆவணம் ஏதுமில்லாமல் நிலுவையாக வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள இயலாது.

5. இறந்துபோன பணியாளர்கள் இருப்பின் அவர்களது விவரத்தினை சமர்பிக்க வேண்டும். அவர்களின் குடும்பத்தினரிடம் பேசி உடன் ஆவணகளை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இருந்த பணியாளர்கள் சார்பில் நிலுவை என தெரிவிக்கும்போது உரிய காரணங்களை தெளிவாக (இறப்பு சான்று/ வாரிசு சான்று/ குடும்ப உறுப்பினர்கள் சார்பாக உறுதிமொழி சான்றுகள்) போன்ற காரணங்கள் நிலுவையாக இருப்பின் அதன் விவரத்தினை தெரிவிக்க வேண்டும்.
6. GPF Closure பொருத்தவரையில் அத்தொகையை பணியாளர்களின் சொந்த பணம் என்பதால் 17பி குற்றச்சாட்டு போன்ற இதர காரணங்களை தெரிவிப்பதை முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
7. CPS பொருத்தவரையில் பணியாளர்கள் விருப்பமின்மை கடிதம் கொடுத்திருந்தால் அதன் நகலினை பெற்று சமர்பிக்க வேண்டும்.
8. நிலுவையின் காரணத்தினை கண்டறிந்து அதனைக் களைந்து விரைந்து கருத்துருக்களை AG office/GDC ஆகிய அலுவலகங்களுக்கு சமர்பிக்க செய்வதே பள்ளியின் தலைமை ஆசிரியர் / தாளாளர்களின் முக்கியமான பொறுப்பாகும் என தெரிவிக்கப்படுகிறது.
9. ஒவ்வொரு நிலுவை இனத்தினையும் தனித்தனியாக ஆய்வு செய்து நிலுவை இனங்களுக்குரிய காரணங்களை எழுத்துபூர்வமாக ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும். எழுத்து பூர்வமான ஆவணங்கள் இல்லாமல் நிலுவையாக வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது.
10. Duplicate Entry – ஐ பொறுத்த வரையில் தொகை பெற்று வழங்கப்பட்ட Original IFHRMS Entry –ஐ மட்டும் வைத்துவிட்டு Duplicate Entries அனைத்தையும் உடனடியாக உரிய DDO க்கள் சம்மந்தப்பட்ட கருவூல அலுவலரை தொடர்பு கொண்டு அனைத்து Duplicate Entries களை நீக்கிவிட வேண்டும். ஒரு ஓய்வு பெற்ற பணியாளருக்கு ஒரே ஒரு Original IFHRMS ID மட்டுமே இருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

**பட்டியல் 2 – ஏப்ரல் 2024 முதல் மே 2025 வரை AG உத்திரவு வரப்பெற்றும் தடையின்மைச் சான்று வழங்காமல் நிலுவையாக வைக்கப்பட்டுள்ளவர்கள் விவரம்.**

1. AG authorisation order வரப்பெற்றும் தடையின்மைச் சான்று காரணமாக நிலுவை வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அன்றே தடையின்மை சான்று ஆன்லைன் மூலமாகவும் ஆப்லைன் மூலமாகவும் வழங்கி உடனடியாக தொகை பெற்றளிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலமாக நிலவை இனங்களை வெகுவாக குறைக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

2. தடையின்மைச்சான்று வழங்க இயலாதவர்களுக்கு என்ன காரணங்களினால் வழங்க இயலவில்லை என்பதை எழுத்து பூர்வ ஆதாரங்களுடன் தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

3. கருத்துருக்கள் அனுப்பப்பட்டு இருப்பின் அதன் முகப்பு கடிதத்தினை ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேற்படி, GPF / DCRG / CPS ஓய்வூதிய நிலுவை இனங்களை முடிக்கும் பொருட்டு 14.06.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி அளவில் சார்ந்த அரசு / நகரவை / உயர்/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு முதன்மைக் கல்வி அலுவலகத்திலும் சார்ந்த அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு வேலூர் மாவட்டக் கல்வி அலுவலகத்திலும் (இடைநிலை) நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தில் தவறாமல் தலைமை ஆசிரியர்கள்/ தாளாளர்கள் மற்றும் கருத்துருக்கள் தயார் செய்யும் நபர் வர வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. பட்டியல் –1 & 2
2. படிவம் (Pension format)

**// ஒப்பம் //**
**முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),**
**வேலூர்.**

**பெறுநர் :**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர்.

2. சார்ந்த அரசு / அரசு நிதியுதவி / நகரவை உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

**நகல்**

கோப்பிற்கு.

(பா.க)